உ

சிவமயம்.

ஸ்ரீபூதேவி துணை.

# நெல்லை அரிக்கிடை போடுதல்.

BY

K. CHIDAMBARANATHA MUDALIAR,

LAND-LORD, SHIYALI.

சிவமயம்.

ஸ்ரீபூதேவி துணை.

# நெல்லை அரிக்கிடை போடுதல்.

நல்லரிமேல் அன்னம் நளினை நடைபயிலும்
நெல்லரிவார் நிற்கும் நிலத்து.

பூமியைத் திருத்தி யுண்டலே பிரதானத் தொழிலாக மேற்கொண்டுவரும் நமது புண்ணிய தேசத்தில் பெரும்பாலும் நெற்பயிரைப் பருவத்தே பயிர்செய்து ஏற்றகாலத்தில் அறுவடை செய்துவருகிறோம். அவ்வாறு அறுவடை செய்துவருதலில் சிலகாலத்திற்குமுன் நடத்திவந்ததற்கும் இப்போது நடத்திவருவதற்கும் பெரிதும் வித்தியாசம் காணப்படுகிறது. நெற்பயிர் முற்றியபின் மிகுந்த கவனத்தோடும் தானியம் சிறிதும் சேதப்படாவண்ணம்

அறுத்து அதனை மணியாக்கி நமது களஞ்சியங்களில் கொண்டுவந்து சேர்க்கிறோம். இங்ஙனம் சேர்ப்பதில் தற்காலம் தானியத்தின் நன்மைப் பயன்களைக் கருதாமல் முற்றியதும் முற்றாததும் பதர் சங்காயம் உள்ளதுமான நிலைமையில் தானியத்தைச் சிலர் அறுவடைசெய்கிறார்கள். இதனால் நிலச் சுவான்தார்களும் தானியத்தை விலைக்கு வாங்கி உண்பவர்களும் பலவாறு கஷ்டமும் நஷ்டமும் அடைகின்றனர். இவ்விதம் சேர்க்கப்பட்ட தானியம் புழுங்கலுக்கும் சற்றும் உபயோகப்படாமற்போகிறது. பச்சரிசிக்கு எவ்வாறாகும் என்பதைக் கவனியுங்கள்.

நமது முன்னோரும் சிலகாலத்துக்குமுன்வரை நாமும் நெல்லைக் கலத்துக்கு ஒருமரக்கால் பசுமையாயிருக்கையில் அறுத்துப் பனிகாய்ந்தபின் நெல்லைச் சேகரித்து அரிக்காய்ச்சல் போட்டுத் தானியத்தைக் கொண்டுவந்து பச்சரிசிக்கு உபயோகித்துவந்தோம். இது நிலச் சுவான்தார்களுக்கும் ஏனையோருக்கும் சௌகரியமாகவும் நன்மையாகவும் இருந்துவந்தது. இவ்விஷயம் நிலச் சுவான்தார் யாவரும் நிச்சயமாக

அனுபவத்திற் கண்டறிந்த உண்மை. ஆயினும் இப்போது அவ்வாறு செய்பவர் மிகச் சிலரே. அன்றியும் கைக் குத்தரிசியானது மில்லில் அரைக்கப்படும் அரிசியைக்காட்டிலும் எல்லாவிதத்திலும் மேன்மையுள்ளதென்று பல பிரமாணங்களைக்காட்டி 4–5–36 ல் என்னால் ஒரு கைப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. புழுங்கலரிசியைப் போலவே பச்சரிசியும் கையால் குத்தப்பட்டதானல் பல நன்மைகள் விளைவிக்கக்கூடியதாகவிருக்குமென்று பல ஜனங்களும் நன்கு அறிந்திருக்கிறார்கள். மில் பச்சரிசி அளவுகடந்து இடிந்துபோவதால் அளவற்ற ஜனங்கள் அதனை வெறுக்கிறார்கள். அதன் நிமித்தம் நெல் விலைக் குறைவும் அரிசி விலைக் குறைவும் ஏற்படுகின்றன.

ஆகையால் தொன்றுதொட்டு நாம் அனுசரித்து வந்த வழக்கம் போலவே கிருஷிகர் யாவரும் மேற்கண்டவாறு நெல்லைப் பனிக்காய்ச்சல் அரிக்கிடையிற் போட்டு கையினாலேயே குத்தி நேர்த்தியான பச்சரிசியாக்கி உபயோகித்துக் கொள்வார்களாக. இவற்

றால் தானியம் சேதப்படாமல் விலை உயர்ந்து அரிசி உபரிகண்டு சாதம் செம்மையாயும் ருசியாயும் சமைக்கப்பட்டு நிலச் சுவான்தார்கள் அனைவருக்கும் ஏனையோருக்கும் மிக்க லாபத்தையும் சௌகரியத்தையும் உண்டாக்கும் என்பது திண்ணம்.

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ் காண்ப
ரலகுடை நீழ லவர்.

ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்.
புண்ணிய மிகுத்துப் பொலிகநெல் லரியே.

சீகாழி,
11—11—36.

K. சிதம்பரநாதமுதலியார்.

PRINTED AT THE KUMARAN PRESS, SHIYALI.

கைக்குத்தரிசிப் பண்டக சாலை,

திருத்தொண்டர் குருபூஜைமடம்,

தெற்குவீதி, சீகாழி.